**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை– மனநலம் பாதிக்கப்பட்டோரை மீட்டு மனநோய் மருத்துவமனை மற்றும் மறுவாழ்வு மையங்களில் சேர்க்கும் மீட்புத் திட்டம் செயல்படுத்துதல்– 2016–17 ஆம் ஆண்டிற்கான கூடுதல் பயனாளிகள் சேர்த்து 2017–18 ஆம் ஆண்டிற்கான தொடராணை மற்றும் ரூ.7,50,000/– நிதி ஒப்பளிப்பு செய்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(1டி) எண்.45

நாள்: 28–06–2017
ஹேவிளம்பி, ஆனி 14,
திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்க:-

1. அரசாணை(1D) எண்.60, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 16–08–2016.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் ந.க.எண்.216/மஇக4/2017, நாள் 07.03.2017.

-------

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, ஆதரவற்ற நிலையில் திரிந்து கொண்டிருக்கும் மனநோயாளிகளை கண்டறிந்து, உரிய வழிமுறைகளை பின்பற்றி, மனநல மருத்துவ மனைகளிலோ அல்லது தொண்டு நிறுவனங்கள் மூலம் அரசால் நடத்தப்படும் பராமரிப்பு இல்லங்களிலோ சேர்க்கும் "மீட்புத் திட்டத்தை'',2016–2017 ஆம் ஆண்டில் தொடர்ந்து நடத்தவும், இத்திட்டத்திற்கென ரூ.7,50,000/– (ஒரு நபருக்கு ரூ.1500/– வீதம் 500 நபர்களுக்கு) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தமது கடிதத்தில், ஆதரவற்ற நிலையில் திரிந்து கொண்டிருக்கும் மனநோயாளிகளை கண்டறிந்து, உரிய வழிமுறைகளை பின்பற்றி, மனநல மருத்துவ மனைகளிலோ அல்லது தொண்டு நிறுவனங்கள் மூலம் அரசால் நடத்தப்படும் பராமரிப்பு இல்லங்களிலோ சேர்க்கும் "மீட்புத் திட்டத்தை'', 2016–2017 ஆம் ஆண்டில் தொடர்ந்து நடத்தவும், இத்திட்டத்திற்கென ரூ.7,50,000/–ஐ செயல்முறை ஆணைகள் மூலமாக 500 பயனாளிகளுக்கு ரூ.1500/– வீதம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது என்றும், மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் 2016–17 ஆம் நிதியாண்டிற்கு கூடுதலாக 132 பயனாளிகள் கண்டறியப்பட்டுள்ளதாகவும் அதனை தொடர்ந்து ஒரு நபருக்கு ரூ.1500/– வீதம் 132 நபர்களுக்கு ரூ.1,98,000/– நிதி ஒதுக்கீடு செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை நன்கு பரிசீலினை செய்த அரசு அதனை ஏற்று, ஆதரவற்ற நிலையில் திரிந்து கொண்டிருக்கும் மனநோயாளிகளை

கண்டறிந்து, உரிய வழிமுறைகளை பின்பற்றி, மனநல மருத்துவ மனைகளிலோ அல்லது தொண்டு நிறுவனங்கள் மூலம் அரசால் நடத்தப்படும் பராமரிப்பு இல்லங்களிலோ சேர்க்கும் "மீட்புத் திட்டத்தை'', 2016–17 ஆம் ஆண்டில் கூடுதலாக கண்டறியப்பட்ட 132 பயனாளிகளை 2017–18 ஆம் நிதியாண்டிற்கான திட்டத்தில் சேர்த்து 500 பயனாளிகளுக்கு திட்டத் தொடராணை வழங்கியும் இத்திட்டத்திற்கு ரூ.7,50,000/– (ரூபாய் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம், பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படல் வேண்டும்:–

2235 சமூகப் பாதுகாப்பும் நலனும்– 02 சமூக நலன்– 101 மாற்றுத் திறனாளிகள் நலன்– மாநிலச் செலவினங்கள்– MT- மனநலம் பாதிக்கப்பட்டோரை மீட்டு மனநல மருத்துவமனைகள் / மறுவாழ்வு மையங்களில் சேர்க்கும் மீட்புத் திட்டம்– 09 –உதவித் தொகை– 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை.
(து.தொ.கு 2235–02–101–MT–0936)

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று. மாவட்டங்களின் தேவைக்கேற்ப பகிர்ந்தளிக்க, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. மேலும், இத்திட்டத்தை செயல்படுத்தும் பொழுது, அரசாணை(நிலை)எண்.79, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 05–10–2010, பத்தி 4ல் வெளியிடப்பட்டுள்ள நிபந்தனைகளை தவறாமல் பின்பற்றுமாறும், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா. எண்.30441/நிதி(சந)/2017, நாள் 26.06.2017–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ).**

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–5.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
மாநிலக் கணக்காயர் (இருப்பு), தலைமைச் செயலகம், சென்னை–9.
முதன்மை மாநிலக் கணக்காயர்,சென்னை–18.

**<u>நகல்:-</u>**
நிதி (சந)த் துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி .

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.